ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஸ்ரீ ராம பட்டாபிஷேக தினத்தன்று

ஸ்ரீ ஸ்வாமிஜி

வேணு : 11 | அக்டோபர் – 2005 | கானம் : 3

www.madhuramurali.org



ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்

இடம் : மதுரபுரி

தேதி : 06.09.2005













ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்



# மதுரமுரளி

Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

| Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05 | Licensed to Post without prepayment WPP No. 319/03-05 |
| --- | --- |

| வேணு : 11 | அக்டோபர் – 2005 | கானம் : 3 |
| --- | --- | --- |




பட்டாபிஷேக வைபவத்தன்று ஸ்ரீ ராமர்

இடம் : மதுரபுரி


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;
e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 11 அக்டோபர் 2005 கானம் : 3

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 118 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 5 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 90 | 9 |
| 6. | ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 5 | 13 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 93 | 17 |
| 8. | மாலே மணிவண்ணா! - 37 | 19 |
| 9. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 37 | 22 |
| 10. | கோபீ ப்ரேமை | 28 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 118 | 30 |
| 12. | செய்திகள் | 32 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : ஆரபி                                        தாளம் : மிஸ்ரசாபு

*பல்லவி*

***ஸ்வாகதம் ஸ்வாகதம் ஸீதே - இஹ (ஸ்வாகதம்)***

*சரணங்கள்*

***தர்மசாரிணி தர்மபாலினி***
***தர்மகாமினி ஸீதே (ஸ்வாகதம்)***

***சாருபாஷிணி சாருஹாஸினி***
***சாருகேசினி ஸீதே (ஸ்வாகதம்)***

***பத்மலோசனி பத்மமாலினி***
***பத்மவாஸினி ஸீதே (ஸ்வாகதம்)***

***முரஹரதேவி ஸுரகணபூஜிதே***
***நரமுரளீனுத ஸீதே (ஸ்வாகதம்)***

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhuramurali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamiji's lectures / essays
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas and more.

## 118

ஸ்ரீ ஸ்வாமிஜி, சில நாட்களுக்கு முன்பு, ஸத்ஸங்கத்து அன்பர்களை அழைத்து, இப்பொழுதெல்லாம் தமக்கு சில விநோதமான அநுபவங்கள் ஏற்படுகின்றது என்றும், அதனால் தமக்கு கார்யங்களில் ஈடுபடுவது சிரமமாக உள்ளது என்றும், சிலகாலம் தான் தனிமையில் இருப்பதற்கு பக்தர்களிடம் அனுமதி கோரினார்கள். அதன்படி இந்த வருடம் கோகுலாஷ்டமி ஒட்டி நடைபெறும் ப்ரஹ்மோத்ஸவமும் கிடையாது என்று முடிவெடுக்கப்பட்டது. அதில், ஸ்ரீ ஸ்வாமிஜி தீர்மானமாகவும் இருந்தார்கள்.

கோகுலாஷ்டமிக்கு இரண்டு நாட்கள் முன்பாக ஸ்ரீ ஸ்வாமிஜி, சென்னை பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளை தரிசனம் செய்ய வந்திருந்தார்கள். அப்பொழுது சிறிது நேரம் கீர்த்தனைகளைப் பாடிக் கொண்டிருந்தார்கள். உடனே, அவருடைய மனோ**பா**வத்தில் மாற்றம் ஏற்பட்டது. இந்த வருடம் ப்ரஹ்மோத்ஸவம் கொண்டாடுவதாக முடிவெடுத்தார்கள். இரண்டு நாட்களே இருந்தபொழுதிலும் அதற்கான ஏற்பாடுகள் வேகமாக செய்யப்பட்டன. பக்தர்கள் எல்லோரும் வந்து கலந்துகொண்டார்கள். உத்ஸவம் கோலாஹலமாக நடைபெற்றது. உத்ஸவத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி, தன்னை மறந்து ஆடி, பாடிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக சென்னை ப்ரேமிகபவனத்தில் பரம ராமபக்தரான ப்ரும்மஸ்ரீ V. ஸ்வாமிநாத ஆத்ரேய சாஸ்த்ரிகள் அவர்கள் ஸ்ரீமத் ராமாயணம் சொன்னார்கள். அது, அப்பொழுது பூர்த்தியாகவில்லை. அதற்குப் பிறகு சில முறை ஏற்பாடு செய்யப்பட்டும் ஏனோ தடங்கல் ஏற்பட்டு நின்றுவிட்டது. ப்ரேமிகவரதன் இந்த வருடம் தன்னுடைய உத்ஸவத்தில் ராமாயணத்தை கேட்பதற்கு ஆசைப்பட்டான்

போலும். ப்ரும்மஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயரின் ஸ்ரீமத் ராமாயண பிரவசனம் நடைபெற்றது. தம்முடைய உடம்பின் அசதியைக் கூட பார்க்காமல் இந்த வயதில் ஒரு குழந்தையைப் போன்ற குதூஹலத்துடன் தினமும் காலை இரண்டு மணிநேரம், மாலை இரண்டு மணிநேரம் பிரவசனம் செய்தார்கள். ராமகுணம் சொல்வதில் அவருக்கு இருக்கும் ஆர்வத்தை சொல்லிமுடியாது. அப்படி ஒரு ஆர்வம்.

உத்ஸவம் முடிந்த பிறகும் மூன்று நாட்களுக்கு ஸ்ரீமத் ராமாயண பிரவசனம் தொடர்ந்தது. கடைசி நாள் அன்று, மதுரபுரி ஆஸ்ரமம் அயோத்தியாகவே மாறிவிட்டது. கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலை நந்திகிராமமாக **பா**வித்து அங்கிருந்து ஸ்ரீராமரை பூர்ணகும்ப மரியாதை, மங்கள வாத்யம், நாமகீர்த்தனம், வேதகோஷம் இவற்றுடன் அழைத்து வந்து, திருமஞ்சனம் செய்து, பட்டாபிஷேகம் செய்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வந்திருந்த அனைவரும் தங்கள் தங்கள் கைகளினாலேயே ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேகம் செய்வித்தார்கள்.

ப்ரும்மஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயருக்கு கனகாபிஷேகமும் செய்யப்பட்டது. வந்திருந்த பக்தர்கள் அனைவரும் பத்து நாட்கள் நடந்த உத்ஸவத்தை காட்டிலும், ஒரு நாள் நடந்த பட்டாபிஷேகம் அதிவிமர்சையாக இருந்தது என்று சொல்லியபடியே பிரிவதற்கு மனமில்லாமல் பிரிந்து சென்றார்கள்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

ஒருவர் சொல்லியபடி நீ நடக்க விரும்பினால் அவர் என்ன சொல்கிறார் என்பதை மட்டும் கவனி. ஒருவர் நடப்பதை பார்த்து நடக்க விரும்பினால் அவருடைய நடத்தையை மட்டும் கவனி.

- **ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : நாம் இறந்தவர்களுக்காக வருடாவருடம் திதி கொடுக்கின்றோம். அதனால் இறந்தவர்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படுமா?*

பதில் : இவை, நிச்சயமாக அவர்களுக்கு ஓரளவு நன்மையை கொடுக்கும்.

*கேள்வி : நாம் மறுபிறவி உண்டு என்று கூறுகின்றோம். இறந்தவர்கள் மறுபிறவி எடுத்திருந்தால், அவர்களுக்கு இது எப்படி பயன்படும்?*

பதில் : அவர்கள் எத்தனை பிறவி எடுத்திருந்தாலும் அவர்களுக்கு நாம் செய்யகூடிய காரியங்களால் நன்மை கிடைக்கும்.

*கேள்வி : கோயிலில் பிரதிஷ்டை செய்யப்படும் சிலையை (சில்பம் செய்யப்படும்பொழுது) காலால் மிதிக்கின்றோம். அதனிடம் பலவிதத்திலும் அலட்சியமாக நடந்துகொள்கின்றோம். ஆனால், பிரதிஷ்டை என்று ஆனவுடன் அதற்கு எல்லா மரியாதைகளையும் செய்து வணங்குகின்றோம். இது சிரிப்பாக இல்லையா?*

பதில் : பல மாடி கட்டடங்கள் கட்டுகின்றார்கள். அதற்கு வேண்டிய மின்சார சாதனங்களைப் பொறுத்துகின்றார்கள். அப்பொழுது அதற்கு பயன்படுத்தக்கூடிய எலக்ட்ரிக் கேபிள்கள் (Electric Cables) அங்கும் இங்குமாக கிடக்கின்றது. அதை காலால் மிதிக்கின்றோம். கையால் தொடுகின்றோம். எது வரை? மின்சார இணைப்பு கொடுக்கப்படும் வரை. அதன்பிறகு அதனிடம் மிகவும் ஜாக்ரதையாக நடந்து கொள்கின்றோம்! ஏன்? அதுபோல், நேற்று வரை அது கல்லால் ஆன சிலை. இன்று கும்பாபிஷேகம் ஆனவுடன், அதில் மந்திரத்தினால் இறைத்தன்மை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவேதான், அந்த தெய்வத்திற்கு எல்லா மரியாதைகளையும் செய்து வழிபடுகின்றோம்.

*கேள்வி : மின்சாரத்தை தொட்டால் நாம் உணரலாம். அதாவது மின்சார ஓட்டம் அதில் ஏற்பட்டிருக்கின்றது என்பதை எரியும் விளக்குகள், சுற்றும் மின் விசிறிகள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். ஆனால், தெய்வத்தன்மை ஏற்பட்டிருக்கின்றது என்பதை எப்படி தெரிந்து கொள்வது?*

பதில் : எத்தனையோ பக்தர்களுடைய பிரார்த்தனைகள் நிறைவேறுகின்றதே! அதுவே இதற்கும் நிரூபணம்!

*கேள்வி : தொட்டுப் பார்த்து இறைத்தன்மையை உணர முடியுமா?*

பதில் : நாமே நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் சிலரைப் பார்த்து, ''நீ செய்த காரியம் என் மனதைத் தொட்டுவிட்டது'' என்கின்றோம். ''நீ பேசிய பேச்சு என் மனதைத் தொட்டுவிட்டது'' என்கின்றோம். அதுபோல் தெய்வத்தையும் மனதால் தொட்டு உணர வேண்டும்.

*கேள்வி : ஒரு தெய்வத்தை படத்தில் வரைந்து வழிபடுவதால் எப்படி பக்தி வரும்? அது வெறும் காகிதம்தானே?*

ஸ்ரீ ஸ்வாமிஜி : உங்கள் சிறிய மகன், ஒரு விரசமான படம் எழுதிய காகிதத்தை கையில் வைத்துள்ளான். நீங்கள் என்ன செய்வீர்கள்?

*பக்தர் : நான் பிடுங்கி தூர எறிவேன்.*

ஸ்ரீ ஸ்வாமிஜி : ஏன்?

*பக்தர் : அது அவனுடைய மனதை விகாரப்படுத்தும்.*

ஸ்ரீ ஸ்வாமிஜி : அது காகிதம் தானே?

*பக்தர் : இப்பொழுது என்னுடைய கேள்விக்கு பதில் கிடைத்து விட்டது. என் தவறை உணர்ந்தேன்.*

---

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

# மாதம் ஒரு புத்தகம்

நூலின் பெயர் : நான் கண்ட சித்தர்கள்

எழுதியவர் : பொன். பரமகுரு

வெளியிட்டோர் : வானதி பதிப்பகம்

சமீபத்தில், நான் ஒரு புத்தகக் கண்காட்சிக்குச் சென்றிருந்தேன். அதில் திரு. பொன். பரமகுரு அவர்கள் எழுதிய 'நான் கண்ட சித்தர்கள்' புத்தகத்தைக் கண்டேன். இது, சென்னை வானதி பதிப்பகத்தின் வெளியீடு. பொன். பரமகுரு அவர்கள் பல மஹான்களுடன் தொடர்புகொண்டவர் என்பதையும், அவருடைய தந்தை, ஒரு மஹாத்மாவை தன்னுடனேயே வைத்து, தொண்டு செய்தவர் என்பதையும், அந்த மஹாத்மாவினுடைய காலத்திற்குப் பிறகு, அந்த மஹாத்மாவின் திருவருளால் இவருடைய தந்தையே சித்தபுருஷராக விளங்கினார் என்பதையும் நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆகவே, அந்த புத்தகம் என்னை வாங்கத் தூண்டியது. அதை கையில் எடுத்து, சட்டென்று பிரித்துப் பார்த்தபொழுது, அதில் சில வரிகள் என் கண்களில் தென்பட்டன...

''நம் பாரத நாட்டில் கோடிக்கு ஒருவர் பூரண ஞானியாய்த் திகழ்கிறார்கள். இன்று அப்படித் திகழும் அறுபது பேரில் பாதிக்கு மேல் தென்னாட்டில் உள்ளார்கள். அவர்களைக்கண்டு தரிசித்தாலே போதும், நமது பாபம் குறைந்து, புண்ணியம் கூடும் எனக் கூறி (தபோவனம் ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள்) என்னைப் பல சான்றோரைத் தரிசிக்கச் செய்தார்கள்........'' என்று இருந்தது.

இந்த வரிகள் மேலும் அந்த புத்தகத்தைப் படிப்பதற்கான ஆர்வத்தை என்னுள் தூண்டியது. ஞானம் என்பது ஒரு மதத்திற்கோ, மொழிக்கோ, நாட்டிற்கோ, இனத்திற்கோ மட்டும் உரியது அல்ல என்பதை இந்தப் புத்தகத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும் நன்கு உணர்வார்கள். மேலும், ஞானத்திற்கும், கல்வி அறிவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது புரியவரும்.

இந்த நூலாசிரியரின் செல்ல மகளான மீனாவிற்கு கடுமையான டைபாய்டு (Typhoid) ஜுரம் ஏற்படுகின்றது. மனதினால் பகதூர்வலிபா என்ற மஹாத்மாவை இந்த ஆசிரியர் ப்ரார்த்தித்துக்கொண்டார். அடுத்த நாள், அந்த முஸ்லீம் ஸாது தானாகவே இவரது வீட்டிற்கு வருகின்றார். வரும்பொழுது ''உன் மகளுக்கு உடம்பு சரியில்லையா?'' என்று கேட்டுக்கொண்டே வருகின்றார். கடுமையான டைபாய்டு ஜுரம். அந்த நிலையிலும் அந்த மஹாத்மா, அவர்களை பெங்களூரை அடுத்துள்ள சிக்மகளூரையும் தாண்டி, குட்டங்கிரி என்ற இடத்திற்கு அழைத்துச் செல்கின்றார்.

அங்கு 'ஆகாய கங்கை' என்ற நீர்வீழ்ச்சியில் ஐஸ் கட்டியென நீர் விழுந்து கொண்டிருக்கின்றது. அதில் அந்த டைபாய்டு கண்ட பெண்ணை நீராடச் சொல்கின்றார். அவளும் நீராடுகின்றாள். அன்று இரவே ஜுரம் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றது. சென்னைக்கு வந்தபின் டாக்டர்கள், ''இந்த நோய் எப்படி சரியாகியது?'' என்று அதிசயிக்க, நூலாசிரியர், 'திருவருளால் எல்லாம் சரியாகியது' என்று கூறிய பதில் ரசிக்கத்தக்கது.

ஒருபுறம் அந்த மஹாத்மாவினுடைய மகத்துவத்தை இந்த சம்பவம் உணர்த்தினாலும், மற்றொரு கோணத்திலிருந்து பார்த்தால், நூலாசிரியருக்கு அருளாளர்களின் திருவருளில், எத்தகு ஆழ்ந்த நம்பிக்கை இருந்திருந்தால் அவர் இத்தகைய ஒரு காரியத்தை செய்யத் துணிந்திருப்பார் என்பதும் நன்கு புலனாகிறது.

அரோஹரா சுவாமிகள் தீராத நோய்களையெல்லாம் திருநீறு பூசி குணப்படுத்தியதும், அவருடைய எளிமையான வாழ்க்கையும் அதிசயிக்கத்தக்கவை.

மேலும், இந்தப் புத்தகத்தில் பல சித்தபுருஷர்கள் மற்றும் மஹாத்மாக்களின் அருள் விளையாடல்கள் பற்றி நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**– டாக்டர். ஆ. பாக்யநாதன்**

# எந்தரோ மஹானுபாவுலு - 90

புரிமஹராஜ், ''நான் பூஜை விதிகளைத் தெரிந்துகொண்டேன். ஆனால், இந்த பாயசத்தை எப்படிச் செய்வது என்று கற்றுக் கொள்ளவில்லையே! கொஞ்சம் இதைச் சுவைக்கக் கிடைத்தால் நான் தெரிந்துகொண்டுவிடுவேன்! அதுபோலவே, என் கோபாலனுக்குச் செய்துவிடுவேன். ஒருவேளை, நான் நாக்குச் சபலமடைகிறேனோ என பயமாக இருக்கிறதே!'' என்று நினைத்தார்.

ஆனால், பகவானுக்காக ஆசைப்படுவது எப்படி இந்திரிய இச்சை ஆகும்! இப்படி விதவிதமாக குழம்பினார். ஆனால், அவர்தான் எதையும் யாசிக்கமாட்டாரே! எனவே அவரது ஆசை மனத்துள்ளேயே அடங்கிவிட்டது. மாலை நைவேத்யம் ஆகி, ஆரத்தி முடிந்து கோவில் கதவை மூடிவிட்டனர். அனைவரும் வீடு சென்றனர். மஹராஜும் கிராமத்திலிருந்து வெளியே ஒரு குடிலில் சென்று தங்கினார்.

நடுஇரவு சமயம் புஜாரி ஒரு கனவு கண்டார். கோபீநாத் பகவான் அவர் முன் தோன்றி, ''புஜாரி! புஜாரி! நீ எழுந்திரு! எனக்கு ஒரு வேலை செய்! என் பக்தன் மாதவேந்திரபுரி கிராமத்திற்கு வெளியே தங்கி உள்ளான். அவனுக்கு என்னுடைய க்ஷீர ப்ரஸாதம் வேண்டும் என ஆசை உள்ளது. அவனுடைய ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக நான் நைவேத்யம் செய்யும்போது ஒரு பாத்திரத்தை திருடி எடுத்து என் வஸ்த்ரத்தில் ஒளித்து வைத்திருக்கிறேன். நீ அதைக் கொண்டு மாதவேந்திரரிடம் கொடுத்து விட்டு வா'' என கட்டளை இட்டான். புஜாரி அலறி அடித்துக்கொண்டு எழுந்து கோவிலை நோக்கி ஓடினான். அங்கு கதவைத் திறந்தால் பகவான் நிஜமாகவே வஸ்த்ரத்திற்குள் ஒரு பாயச பாத்திரத்தை ஒளித்து வைத்துக்கொண்டு நிற்கிறான்!

உடனே புஜாரி அதை எடுத்துக்கொண்டு நகர வீதிகளில் ''இங்கு மாதவேந்திரபுரி என்பவர் யார்? அவர் வந்து இந்த க்ஷீர பாத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்! பகவான் அவருக்காக இதைத் திருடி வைத்திருக்கிறான்'' என இரைந்து கூவிக்கொண்டே ஓடினார்.

இப்படி கூவிக்கொண்டே புரிமஹாராஜ் இருக்கும் இடத்தை புஜாரி அடைந்தார். புஜாரியின் வாயிலிருந்து தன் பெயர் கூறப்பட்டதைக் கேட்டு மஹராஜ் வெளியே வந்து, ''நான் தான் மாதவேந்திரபுரி! உங்களுக்கு என்னவேண்டும்?'' என வினவினார்.

உடனே புஜாரி அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி வினயமாக, ''மஹராஜ்! நீங்கள் தன்யர்! உங்களுடைய அசாதாரண பக்திக்கு கோடி கோடி வந்தனம்! உங்கள் தர்சனத்தால் நான் பாவனமானேன்! பகவானை இத்தனை நாள் பூஜை செய்தது இன்றுதான் சபலமாகியது. எங்களைப் போன்ற தனத்திற்கு அடிமையான பூஜாரிகளுக்கு பகவான் தர்சனம் என்பது கிடைக்கக்கூடியதா என்ன? உங்களைப் போன்ற பரமபக்தர்களுக்காக பகவான் தரிசனம் தருகிறான்! உங்களது இச்சையை பூர்த்தி செய்ய விச்வத்திற்கு ஒரே அதிபதியான பகவான் திருட்டுத்தொழில் செய்து உள்ளான் என்றால் அந்த மஹாபாகவதரான நீங்கள் பகவானை விட உயர்ந்தவர்! இந்தாருங்கள்! பகவான் உங்களுக்காக எடுத்து வைத்துள்ள பாயசம்!'' என்று ப்ரசாதத்தைத் தந்தார்.

மஹராஜ் வெட்கத்துடனும், வினயத்துடனும் அந்த ப்ரசாதத்தை பெற்றுக்கொண்டார். பகவானின் கருணை, பக்தவாத்ஸல்யம், தன் பக்தர்களின் அவனுக்கு உள்ள சொந்தம் ஆகியவற்றை நினைத்து ப்ரேமை மேலீட்டால் பொங்கி பொங்கி அழுதார். பிச்சைக்காரன் போல் அந்த ப்ரசாதத்தை இரு கைகளை விரித்துப் பெற்றுக்கொண்டு உன்மத்தம் பிடித்தனைப்போல் ஏகாந்தத்தில் அமர்ந்து அதைச் சுவைத்து உண்டார். வார்த்தைகளால் விவரிக்க இயலாத ஆனந்தத்தை அடைந்தார். பகவானின் ப்ரஸாதம்! அதுவும் தனக்காகத் திருடி வைத்து அளித்த ப்ரஸாதம்! இது போதாதா ஆனந்தத்திற்கு! வழித்து வழித்து சாப்பிட்டார். பானையை உடைத்து துண்டுகளை வஸ்த்ரத்தில் முடிந்துகொண்டு தினமும் ஒவ்வொரு பானைத்துண்டையும் சாப்பிட்டார். பகவான் அளித்த பாத்திரமல்லவா!

ரேமுணாய் கிராமத்து மக்களுக்கு இந்த 'க்ஷீர' திருட்டு சமாசாரம் பரவியதும் ஆயிரக்கணக்கில் ஜனங்கள் ஓடிவந்து மாதவேந்திரபுரியை தரிசனம் செய்தனர். அவரது புகழ் எங்கும் பரவியது. புகழை கழுதையின் மலத்தைப்போல் துச்சமாக நினைக்கும்

புரிமஹராஜ் கௌரவத்தை நரகமாக நினைத்து கோபீநாதபகவானை நமஸ்கரித்துவிட்டு இனி ரேமுணாயில் தங்க வேண்டாம் என தீர்மானித்து தன் யாத்திரையை தொடங்கினார்.

ஜகன்னாதபுரியை அடைந்ததுமே அவரது வரவு பெரும் செய்தியாகியது. ஜனங்கள் அவரை தரிசிக்க ஆவலுடன் கூடினர். எத்தனைதான் அவர் வெறுத்து ஓடினாலும் புகழ் அவரை நிழல்போல் பின்பற்றியது! சிறிது நாட்கள் புரியில் தங்கினார். அங்கு அவர் தனது கோபாலன் சந்தனத்திற்கு ஆசைப்பட்டதைப் பற்றி கூறியதும் புரிவாசிகள் மிகவும் உள்ளம் மகிழ்ந்து அவருக்கு மலயகிரி சந்தனத்திற்கு ஏற்பாடு செய்து தந்தனர். ராஜா பெரும் அளவு சந்தனம், கேசரம், கற்பூரம் ஆகியவற்றிற்கும் ஏற்பாடு செய்து தந்தான். வ்ரஜத்துக்கு செல்லும்வரை அவருக்குத் தொண்டு செய்ய இருசேவகர்களையும் அனுப்பினான்.

இவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு புரிஜி திரும்பி வரும்போது மறுமுறை ரேமுணாய் கிராமம் வந்தார். பகவான் ஆணையிட்டான் என்றவுடன் சந்தனத்தைக் கொண்டுவர ஒரு மூலையிலிருந்து ஒரு மூலைக்கு எந்த சிரமமும் பார்க்காமல் ப்ரயாணத்தைத் தொடர்ந்த மாதவேந்த்ரபுரியை கோபாலன் மேலும் சோதிக்க விரும்பவில்லை. யுத்த காலமாக இருந்தால் சந்தனத்தை எடுத்துக்கொண்டு முகம்மதியர்கள் ஆட்சியில் ப்ரயாணம் செய்வது மிகவும் சிரமமாக வேறு இருந்தது. கோபால பகவான், பூரி மஹாராஜ் கனவில் தோன்றி, ''ஸ்ரீ கோபீநாத்தும் நானும் ஒன்றுதான். நீ வித்யாசம் பார்க்காமல் சந்தனத்தை ஸ்ரீ கோபீநாத்துக்கே பூசி என்னுடைய தாபத்தை தணிப்பாய்'' என்று கூறிவிட்டான்.

மாதவேந்த்ரபுரியும் சந்தனத்தை கோபீநாத் பகவானுக்கே எந்தவித தயக்கமுமின்றி சமர்ப்பித்துவிட்டார். ரேமுணாயில் நான்குமாதம் தங்கி பகவானுக்கு வெயில் காலம் முழுவதும் சந்தனக் கைங்கர்யம் செய்துவிட்டு பகவானின் தாபத்தைத் தணித்துவிட்டு சாதுர்மாஸ்யத்திற்கு மறுபடி புரி சென்று ஜகன்னாத பகவானுடன் கழித்துவிட்டு பிறகு தன்னுடைய ஸ்ரீ கோபாலனைக் காண திரும்பினார்.

இப்படி மாதவேந்த்ரபுரியின் பக்திக் கதையை மிகவும் உருக்கமாக கூறிய மஹா ப்ரபுவிற்கு தொண்டை தழுதழுத்தது. இரு கண்களிலிருந்து கண்ணீர் ஆறாக ஓடியது. அவருக்கு மாதவேந்த்ரபுரி எந்த ஸ்லோகத்தை படித்துக்கொண்டு தனது சரீரத்தை த்யாகம் செய்தாரோ அந்த ஸ்லோகம் நினைவுக்கு வந்தது. அதையே திரும்ப திரும்பக் கூறிக்கொண்டு நித்யானந்தர் மீது மூர்ச்சையாகி விழுந்தார். அனைவரும் அழுதனர். அப்போது பகவானுக்கு நைவேத்யமும் ஆரத்தியும் நடந்தது. ப்ரபுவும் உள்ளே சென்று சயன ஆரத்தியை தரிசித்தார். அன்றிரவு ரேமுணாய்க்கு அருகிலேயே தங்க நிச்சயித்தார். புஜாரி, கோபீநாத் பகவானின் க்ஷீர நைவேத்ய பாத்ரத்தை ப்ரபுவிற்குமுன் வைத்தார். ப்ரபு அதைக் கண்டதுமே ப்ரஸன்னமானார். ''இன்று என் ஜன்மம் சபலமாயிற்று. பகவான் என்னை க்ஷீரப்ரசாதத்திற்கு அதிகாரி என நிச்சயித்துள்ளான்'' எனக்கூறி ஆனந்தமடைந்தார். தன் பக்தர்களுடன் அந்த ப்ரசாதத்தை உண்டு மகிழ்ந்து அன்றிரவை அங்கேயே கழித்தார்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

---

## அறிவிப்பு

குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், சென்னை மற்றும்
ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட், சென்னை
இவற்றைத் தொடர்புகொள்ள விரும்புபவர்கள்,
கீழ்க்கண்ட முகவரியை அணுகவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

No. 24-A, Mangai Street,
Off : Pillayarkoil Street,
Jafferkhanpet, Chennai - 600 083

Contact Cell No. : 94440 03710
email ID : publications@madhuramurali.org

# ஆதிசங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 5

**– குடந்தை என். இராமசர்மா**

ரஸங்களில் தனி ரஸம் ப்ரேமரஸம். இனிமை விஞ்சி நிற்கும் இது ஒரு ராஜரஸம். வெள்ளம் ஆற்றில் பெருக்கெடுத்து வரும் போது, ஆங்காங்கே மடுக்களில் தேங்கி நிற்கும் நீர்களெல்லாம் மறைந்து ஒரே வெள்ள நீராகும். அதேபோல் நெஞ்சில் ப்ரேமரஸம் மேலோங்கும்போது, அது மற்ற எல்லா ரஸங்களையும் தன்னுள் ஐக்கியப்படுத்திக்கொண்டுவிடுகிறது.

இது ராஜரஸம். ஆகையால் இதன் வழி தனி வழி; நேர்வழி; ராஜபாட்டை; ராஜா சந்துபொந்துகளிலா பவனி வருவார்! ''சக்கனி ராஜமார்க்கமு லுண்டக ஸந்துல தூரநேலா, ஓ மனஸா!'' என்பது ராம ப்ரேமையே வடிவெடுத்த தியாக ப்ரும்மத்தின் வாக்கு. ராஜவீதியிருக்க சந்து பொந்துகள் நமக்கெதற்கு என்கிறார்.

இந்தப் பாதைக்கு வந்து சேர்கின்ற வரையில் தான் தடைகள், தடுமாற்றங்கள், மோதல்கள், மோகங்கள், தாகங்கள் எல்லாம். இந்தப் பாதையில் ஏறிவிட்டால், பிறகு பயணமே எளிது. இதுவொரு 'கன்வேயர் பெல்ட்' போலே. நாம் ஏறி நிற்க வேண்டியதுதான். அதுவே, ப்ரேம லக்ஷியத்தில் கொண்டு சேர்த்துவிடும். இவற்றையெல்லாம் ஸ்ரீசங்கரர் சொல்லும் அழகே தனி.

அழகை ரசிக்க ப்ரேமை வேண்டும். அழகிற்கு அழகூட்டுவது ப்ரேமை. ப்ரேம பக்தி நெஞ்சில் எழாத வரையில்தான் கண்கள் உலகம் சம்பந்தப்பட்ட ரூபங்களை ரசிக்கும். காதுகள் வம்புப் பேச்சிற்கு அலையும். ஈரமான நாக்கு ஈரமின்றி பேசும். சுவையைத் தேடி ஓடும். கால்களும் கைகளும் இஷ்டத்திற்குச் செல்லும், செயல்படும். மனமோ எப்போதும் கனத்தே இருக்கும்.

நெஞ்சில் ப்ரேம பக்தி எழுந்துவிட்டால் என்ன ஆகிறது. கண்கள் கண்ணன் அழகைத்தான் ரசிக்கும். காதுகள் கண்ணன் குழலோசைக்கு ஏங்கும். பகவத் குணம் கேட்க அலையும். நாக்கு நாமருசி அறியும். 'ஹரிம் ஏக ரஸம்' என்று அமரும். கால்களும்

கைகளும் கண்ணன் பணி செய்யப் புறப்படும். நெஞ்சு பஞ்சாகும். அறிவு நெறி பெறும். எல்லாம் நிறைவாகும்.

कन्दर्पकोटिसुभगं वाञ्छितफलदं दयार्णवं कृष्णम् ।
त्यक्त्वा कमन्यविषयं नेत्रयुगं द्रष्टुमुत्सहते ॥

*"கந்தர்ப்ப கோடி ஸுபகம் வாஞ்சிதபலதம் தயார்ணவம் க்ருஷ்ணம் ।
த்யக்த்வா கம் அந்ய விஷயம் நேத்ரயுகம் த்ரஷ்டுமுத்ஸஹதே ॥*

கோடி கோடி மன்மதர்களின் அழகைச் சேர்த்து வைத்தால் கூட என் கண்ணனின் அழகிற்கு ஈடாகாதே! உலகின் அழகு, உள்ளத்திற்கு வெப்பம் தரும். என் கண்ணனின் அழகு நெஞ்சின் தாபம் நீக்கி, அதை குளிரச் செய்யுமே! எவ்வாறு குளிரச் செய்யும்? விரும்பியதைக் கொடுத்து, விரும்பிய வண்ணம் கொடுத்து! அலையும் மனதை நிலைபெறச் செய்யும் அழகு கண்ணன் அழகு!

இவன் கருணைக் கடல் அன்றோ; எல்லோர் கண்களையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் கார்முகில் வண்ணனன்றோ. இவனை விட்டு விட்டு இந்தக் கண்கள் யாரைப் பார்ப்பதில் ஆசை கொள்ளப் போகின்றன? இது ப்ரேம ரஸத்தின் ஒரு வெளி அடையாளம்.

கண்ணனின் நான்கு பெருமைகளை எடுத்துச் சொல்லி, ப்ரேம ரஸம் ஒன்றே இவற்றை உணரும் என்றும் காட்டிக் கொடுக்கிறார்.

நமக்கு உடல் நலம் சரியில்லை. வாடி, வதங்கி, சோர்ந்து மருத்துவரிடம் செல்கிறோம். அவரும் என்னைப் போலவே 'ஙே' என்றிருக்கக்கூடாது. பார்த்தாலே, 'அவர் கரத்தால் தொட்டாலே நம் நோய் பறந்துவிடும்' என்று நம்பும் அளவிற்கு 'பளிச்' சென்றிருக்க வேண்டும். இன்முகம், கவர்ச்சி, தூய்மை, திறமை எல்லாம் புலப்படும்படி இருக்க வேண்டும். நாம் விரும்பும் 'நோய் நீக்கத்'தைத் தருபவராக இருக்க வேண்டும். மருந்துகளைக் கொடுத்துத் தோளில் தட்டிக் கொடுத்து வழியனுப்புகிறவராக இருக்க வேண்டும். இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருக்க மாட்டாரா, இன்னும் கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோமா என்று ஏங்கும்படியான கவர்ந்திழுக்கும் கவர்ச்சியுடையவராக இருக்க வேண்டும். இவை நமது எதிர்பார்ப்பு!

இப்படியெல்லாம் இருந்துவிட்டால் நாம் இவரை விட்டுவிட்டு மற்றொரு மருத்துவரிடம் செல்வோமா?

''வைத்யோ நாராயணோ ஹரி:'' என்று பிரபஞ்சம் அனைத்திற்கும் மருத்துவராயிருக்கும் கண்ணனிடம் இந்நான்கும் இருக்கின்றன என்கிறார். இவனை விட்டு விட்டு என் கண்கள் யாரைப் பார்க்க விரும்பும்.

''அக்ஷண்வதாம் பலமிதம்'' என்றபடி கண் படைத்ததின் பயனே கண்ணனைக் காணத்தானே!

நெஞ்சில் 'ப்ரேம ரஸம்' எழாத வரையில் காதுகள் நூறு காத தூரம் கூடப் பாய்ந்து செல்லும். 'ப்ரேம ரஸம்' எழுந்து விட்டாலோ, பொங்கும் பால் நீரைத் தெளித்தவுடன் அடங்குவதுபோல், வெளியே திரியும் இயல்புடைய மனம், திரிதலை ஒழித்துத் தன்னில் ஒடுங்குகிறது. சாவி குறையக் குறைய கடிகார முட்கள் மெதுவாக ஓடி நிற்பதுபோல் காதுகளும், மற்ற புலன்களும் மெதுவாக மெதுவாக அடங்கி கண்ணன் காலடிகளில் அமர்ந்துவிடுகின்றன. வம்பு தும்புகள் இனி இல்லை. பிணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு விடுகின்றன. மற்றவைகள் தொல்லையாகிறது.

पुण्यतमामतिसरसां मनोऽभिरामां हरेः कथां त्यक्त्वा ।
श्रोतुं श्रवणद्वन्द्वं ग्राम्यं कथमादरं वहति ॥

*புண்யதமாம் அதிஸரஸாம் மநோபிராமாம் ஹரே: கதாம் த்யக்த்வா ।*
*ச்ரோதும் ச்ரவண த்வந்த்வம் க்ராம்யம் கதமாதரம் வஹதி ॥*

ஸ்ரீ சங்கரரின் ''ப்ரபோத ஸுதாகரம்'' எனும் அரிய நூலில் இத்தகைய கருத்தாழம் மிக்க 'ப்ரேம ரஸ'த்தின் வெளிப்பாடுகள் அநேகம். ஸௌந்தர்யலஹரி, ஆனந்தலஹரி, சிவானந்தலஹரி போல் இது ஒரு கிருஷ்ணானந்தலஹரி.

புண்ணியம் பெருக்குவதும், பாவம் நீக்குவதும், இனிமைப் பெருக்காயிருப்பதுமான, நெஞ்சைக் கவரும் கண்ணன் கதையை விட்டுவிட்டு காதுகள் ஊர்க்கதை கேட்கப் போகுமா என்ன?

க்ருஷ்ண த்ருஷ்ணை உண்டான பின் லோக த்ருஷ்ணைக்கு ஏது இடம்?

கண்கள் என்ன, காதுகள் என்ன? எல்லா புலன்களுமே, 'தஸ்மிந் த்ருஷ்டே பராவரே', என்று நித்ய வஸ்துவான கண்ணன் கிடைத்தபின் வண்ணமுடன் உலகில் உலாவராது என்பது திண்ணம்.

दौर्भाग्यमिन्द्रियाणां कृष्णे विषये हि शाश्वतिके ।
क्षणिकेषु पापकरणेष्वपि सज्जन्ते यदन्य विषयेषु ॥

''சாஶ்வதிகே க்ருஷ்ணே விஷயே ஹிஸஜ்ஜந்தே கதம் க்ஷணிகேஷு அந்ய விஷயேஷு ஸஜ்ஜந்தே?''

பார்த்தாலே, நினைத்தாலே புத்துணர்ச்சி தரும் எழுச்சிமிகு கவர்ச்சி. இன்முகம் மயக்கும் முறுவல். நண்பர்களால் செய்யப்பட்ட அதிகப்படியான அலங்காரம். ஒயிலான ஒய்யாரம். கால் மாற்றி நின்றுகொண்டு 'மால்' நீக்கும் மோஹன வடிவம். நம்மைத் தொடமாட்டானா, நாமும் தொட்டுப் பார்க்கமாட்டோமா என்று ஏங்க வைக்கும் அழகு. தேவலோகத்து போகங்களையெல்லாம் 'அவாந்தர பலனாக' அள்ளித் தரும் கருணை. திவ்ய கடாக்ஷத்தாலே அமுத நீராட்டம் செல்விக்கும் ஆற்றல் - இவற்றிலே தோற்றுத்தானே போக வேண்டும் நாம். கண்ணனிடம் தோற்பதே வாழ்வின் வெற்றி. வெற்றி தொடரும்.

... வளரும்

*Humble Pranams to* ***H.H. Sri Sri Muralidhara Swamiji***

**M/s. Southern Clearing & Forwarding Agencies Private Limited**

(Since 1972 - Chennai Customs Licenced - R144 Agent)

Old No. 13, New No. 25, IInd Floor, Krishnan Koil Street, Mannady, Chennai - 600 001, India.
Telephone : 91-44-25260781, Telefax : 91-44-25260775, e-mail : scfa_r144@yahoo.co.in

Authorised & Experienced Clearing & Forwarding Agent to handle all your Import and Export.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 93

**– ஸ்ரீ ஸ்வாமிஜி**

ஒரு ஊரில், ஒரு பக்தர் இருந்து வந்தார். அவர் எப்பொழுதும் தியானம், ஜபம், பூஜை என்று ஒருமுகப்பட்ட மனதுடனும், நேர்மையுடனும், ஒழுக்கத்துடனும் கூடிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். பல நாட்கள் அவர் மௌனம், உபவாசம், தனிமை இவற்றுடன் கூடிய வாழ்க்கை வாழ்ந்து வந்ததால் பகவானை நேருக்கு நேர் பார்த்தார். அதனால் ஆனந்தமடைந்தார். அவர் எப்பொழுதெல்லாம் விரும்புகின்றாரோ, அப்பொழுதெல்லாம் இறை தரிசனத்தைப் பெற்று வந்தார்.

அவருக்கு ஒரு நண்பர். அந்த நண்பர் மிகவும் நல்லவர், ஒழுக்கமுடையவர், பண்பாளர், நேர்மையானவர். ஆனால், ஏனோ அவரால் இறைவனை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பக்தருக்கோ ஒரே வருத்தம், 'நம்முடைய நண்பர் இவ்வளவு நல்லவராக இருந்தும், இறைவனை நம்ப மறுக்கின்றாரே!' என்று. அவர் எவ்வளவோ எடுத்துக் கூறி, அந்த நண்பருடன் வாதாடி பார்த்தார். ஆனால், அந்த நண்பர் மட்டும் மாறுவதாக இல்லை.

அந்த பக்தரோ தனது நண்பரிடம், ''இவ்வளவு நான் சொல்லியும், மன்றாடியும்கூட நீ இறைவனை ஏற்க மறுக்கின்றாயே! நீ எப்படித்தான் இறைவனை நம்ப போகின்றாய் என்று தெரியவில்லையே'' என்று கவலைப்பட்டார். அதற்கு அந்த நண்பர், ''இறைவன் என் முன்பாக வந்தால் நான் ஏற்றுக்கொள்வேன்'' என்றார். இதைக் கேட்டவுடன் அந்த பக்தரும், இறைவனிடம் மன்றாடி, ''நீ என் நண்பன் முன்பு வரவேண்டும்'' என்று கேட்டார். அதற்கு இறைவன், ''எத்தனையோ பக்தர்கள் பக்தி சிரத்தையுடன் வழிபடுகின்றார்கள். அவர்கள் முன்பாகவே நான் வருவதில்லை, அப்படியிருக்க, என்னை நம்பாதவர் முன்பாக வரச் சொல்கின்றாயே'' என்று கேட்டார். ஆனால், அந்த பக்தரோ அழுது அடம்பிடித்து எப்படியோ இறைவனை அந்த நண்பர் முன்பாக அழைத்து வந்துவிட்டார். பக்தருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. தன்னுடைய நண்பரைப்

பார்த்து, ‘‘இப்பொழுது நீ இறைவனை ஏற்றுக்கொண்டிருப்பாயே!’’ என்று கேட்டார்.

அதற்கு, அந்த நண்பரோ, ‘‘நான் நாத்திகனாக இருந்தாலும்கூட எவ்வளவோ ஆன்மிக புத்தகங்களை படித்திருக்கின்றேன். எவ்வளவோ ஆன்மிக சொற்பொழிவுகளை கேட்டிருக்கின்றேன், அதில் எல்லாம், இறைவன் ஒருக்காலும் சாதாரண மனிதர்கள் முன் தோன்றமாட்டார் என்று கூறியுள்ளது. எப்பொழுது என் முன் அவன் தோன்றினானோ, அதனாலேயே அவன் இறைவன் இல்லை’’ என்றானே பார்க்கணும்.

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

- மதுரமுரளிக்கான சந்தா தொகையை, ‘‘குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்’’ என்ற பெயரில் மட்டுமே M.O. or D.D. ஆக அனுப்ப வேண்டும்.

  உள் நாடு : மூன்றாண்டு சந்தா ரூ. 180/-
  ஆயுள் சந்தா ரூ. 1000/-
  வெளி நாடு : வருட சந்தா ரூ. 300/-

- சந்தாவை காசோலையாக அனுப்ப வேண்டாம்.
- சந்தா எண், சந்தாதாரர் முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ளமாட்டாது.
- மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் Address labelல் இரண்டாம் வரியில் உள்ளது.
- சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்பினால்தான் வரும் மாதத்தில் செயல்படுத்த முடியும்.
- மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

‘‘**மதுரமுரளி**’’, குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
24-A, மங்கை தெரு, off : பிள்ளையார் கோயில் தெரு,
ஜாபர்கான் பேட்டை, சென்னை - 600 083.

# மாலே மணிவண்ணா - 37

**– மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்**

உயிர்களுக்கு அருள் செய்யும்போது அளப்பரும் ஆற்றல் உடையவனாகிய பெருமான் வாசுதேவனாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறான். இதுவே வியூக நிலையின் முதற்படி. பரவாசுதேவனாக இருந்து பரமபதத்தில் ஆன்மாக்களுக்கு நிரதிசய ஆனந்த இன்ப அநுபவத்தை இடையறாது தந்துகொண்டிருக்கிறான் பெருமான். 'அப்போதைக்கு அப்போது என் ஆராவமுதாய்ப்' பெருமான் விளங்குகிறான் என்பது ஆழ்வார் வாக்கு.

'ஊனில் வாழ் உயிரே' என்னும் திருவாய்மொழியில் நம்மாழ்வார் அந்த இன்ப அநுபவம் எவ்வாறு இருந்தது என்பதை விளக்குகிறார். சொல்லொணாத அந்த இன்பத்தைச் சொல்லுதற்கு உலகில் இன்பமான, சுவையான அத்தனைப் பொருள்களின் கூட்டணியும் தேவைப்படுகிறது ஆழ்வார்க்கு,

*''ஊனில் வாழ் உயிரே! 'நல்லைபோ' உன்னைப் பெற்று*
*வானுளார் பெருமான் மதுசூதன் என்னம்மான்*
*தானும் யானும் எல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்*
*தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே''*

என்பது திருவாய்மொழி (2:3.1)

தேன், பால், நெய், கரும்புச்சாறு, தேவர் அமிழ்தம் என்று இத்தனையும் ஒன்றாகச் சேர்ந்தவழி உண்டாகும் இன்பமே தானும் யானுமாகப் பெருமானுடன் ஆழ்வார் கூடிப் பெற்ற ஆனந்தம் என்பது ஆழ்வார் கூறியதன் கருத்தாகும்.

உலகிற்கு அப்பாற்பட்ட இறைவனது இன்ப நிலையை உணர்த்துவதற்குக் கூட உலகில் நாம் அநுபவித்த இனிய பொருள்களின் சங்கமமே நமக்குத் தோன்றுகிறது. இவை சற்றும் இறை இன்பத்துக்கு நிகராகா என்பது ஆழ்வார்க்குத் தெரியும். ஆயினும், சாமானியர்களாய் நமக்கு உணர்த்துவதற்கும் அப்பேரானந்தத்தைப் பெற நம்மைத்

தூண்டுவதற்கும் ஒரு கருவியாக அவற்றைச் சொல்லி நமக்குப் புரிய வைக்கிறார் என்றே கொள்ளவேண்டும்.

இத்தகைய இன்ப அநுபவத்தை உயிர்கள் பெறுவதற்கு உயிர்களைத் தயார் செய்கிற நிலையே அருளுதல் ஆகும்.

ஒரு பற்றும் இன்றித் தானே தனிமுதலாய் நிற்கும் தத்துவம் கடந்த பரம்பொருளாக இருக்கிற பகவான் எல்லாப் பற்றும் உடையதாய் ஆசைக்கு அடிமைப்பட்டதாய் தத்துவங்களுக்கு உட்பட்டு அவற்றின் பிடியிலே அகப்பட்டுத் தடுமாறுகின்ற உயிரைப் பிறவிப் பெருங்குழியிலிருந்து எடுத்து அருளுகின்ற முதல் நிலையே வ்யூக நிலையில் முதலாவதாகிய வாசுதேவன் என்கின்ற நிலை என்பதை முதற்கண் பார்த்தோம்.

ஆருயிர்களுக்கு அருள விரும்புகிற பகவான் அவற்றை வினைகளை அனுபவித்து நுகருமாறு செய்ய வினைகளுக்கேற்ப பல பிறவிகளைக் கொடுக்கிறான். மீண்டும் மீண்டும் இறந்து பிறந்து தடுமாறும் உயிர்களுக்கு வினைகளை அனுபவிக்கவும் தன்னை உணர்ந்து சரணாகதம் பெறவும் பிறவித் துன்பத்திலிருந்து இளைப்பாற்றலாகத் தன்னுள் ஒடுக்கிக்கொள்கிறான். இதனையே ஸம்ஹாரம்-அழித்தல் என்று சொல்கிறோம். ஒடுக்குதல் என்றும் சொல்லுவது உண்டு.

இந்த ஸம்ஹாரமும் ஒரு வகையில் அருளுவதே ஆகும். பகற்பொழுதில் பல வேலைகளைச் செய்து, வாழும் வசதிகளைத் தேடும் மக்கள் இரவில் எந்த வேலையும் செய்யாமல் செயலற்றிருக்கிறார்கள். அடுத்த நாள் தம் கடமைகளைத் தளராமல் செய்வதற்கு அந்த ஓய்வு தேவைப்படுகிறது. அதுபோலவே பகவான் பிறவிச்சுழலில் உழலும் ஆருயிர்களுக்கு ஒடுக்குதல் என்ற வகையில் இளைப்பாற்றலாகிய ஓய்வைத் தருகிறான்.

இந்த நிலையே ‘ஸங்கர்ஷண’ என்கின்ற இரண்டாம் நிலை. ஸம்ஹார வேளையில் உயிர்களைத் தன்பால் இழுத்துக் கொள்கிற பகவான் கருணை மிக்கவன். ஆதலினால் இந்த ஒடுக்குதலிலும் கருணை காட்டி நழுவினால் உயிர்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்காது; பின்பிறவிகளில் போகபோக்கியங்களைத் துய்க்கவும்

முடியாமல் போகும். அதனால், உயிர்களை ஒடுக்கித் தன்பால் இழுத்துக் கொள்கிற 'ஸங்கர்ஷண' வ்யூகநிலையில் தன் நிலையில் இருந்து நழுவாதவராக 'அச்யுத'னாகவும் இருக்கிறார் என்பதனால் இந்த ஸங்கர்ஷண நாமம் இருபதங்கள் கொண்டதாக 'ஸங்கர்ஷணாய அச்யுதாய நம:' என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் வருகிறது.

'செங்கண் காரி', 'கருங்கண் வெள்ளை' என்றவாறு வியூக நிலையில் முதல் இரண்டு நிலைகளைப் பரிபாடல் கூறுவதை இதுகாறும் பார்த்தோம்.

'வெள்ளை' என்ற பெயரால் 'சங்கருடணனை'க் குறித்தார் பரிபாடல் ஆசிரியர் என்பது உரையாசிரியர் பரிமேலழகர் கூறும் உரைக்குறிப்பிலிருந்து பெறப்படுகிறது. 'சங்கருடணன்' என்பதில் 'சங்கு' என்கின்ற ஒலிக்குறிப்பும் அமைந்துள்ள படியால் பரியாய நாமமாக 'வெள்ளை' என்று பரிபாடல் கூறியது என்று இவர் கூறுவர்.

ஒரு பொருளை அழிக்கிறபோது முதலில் கருமையான 'கரி'யாக ஆகும். அதனையே மீண்டும் எரித்தால் சாம்பலாகிய 'வெள்ளை'யாக ஆகும். அதை மீண்டும் எரித்தாலும் வெள்ளையாக ஆகுமேயன்றி வேறு நிறம் பெறாது. அதனால் எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டு நிற்கிற நிலைக்கு 'வெள்ளை' என்று பெயர் கொடுத்தார் எனலாம்.

திருப்பாற்கடல் கடைந்த வரலாறு பாகவதத்தில் கண்டது. ஸ்ரீமந் நாராயணன் பாற்கடல் கடைந்தபோது சுத்த வெள்ளை நிறமாகவே இருந்தார் என்பதும் பாற்கடலில் முதற்கண் எழுந்த ஆலகால விஷத்தால் அவரது வெள்ளை நிறம் நீலநிறமாக (கருமையாக) மாறிற்றென்றும் ஒரு புராண வரலாறு உண்டு. அதனால் 'வெள்ளை' நிறமும் திருமாலுக்குப் பொருந்துவதே.

கண்ணன், பலராமன் என்ற அவதார நோக்கில் 'பலராமன்' வெண்மை நிறமானவன். சங்க நூல்களில் 'வாலியோன்' (வெள்ளையானவன்) என்றழைக்கப்படுகிறபடியால் அதுபற்றியும் 'வெள்ளை' என்பது பகவானது இரண்டாவது வ்யூக நிலையைக் குறிப்பிடப்பயன்பட்டது பொருந்துவதே.

(தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 37

ஸ்ரீகர்மடீபாய், ராஜஸ்தானிலுள்ள 'பாகட்' என்னும் ஊரில் இருந்த ஸ்ரீ புருஷோத்தம் என்ற ப்ராஹ்மணரின் புதல்வியாக பிறந்தாள். அவளது உண்மையான பெயர் என்னவென்று தெரியவில்லை. திருமணம் ஆன உடனேயே விதவை ஆகிவிட்டாள். விதவை ஜீவனுக்குரிய ஜபம், தபம், வ்ரதம், நியமம் ஆகியவற்றை மிகவும் கடுமையாக கடைபிடித்து, வைராக்யத்துடன் வாழ்ந்து வந்ததால் அவளுக்கு கர்மடீபாய் என்ள பெயர் ஏற்பட்டுவிட்டது.

கர்மடீபாய், மிகவும் அழகு வாய்ந்தவள். பக்தி நிரம்பியவள். வெளியில் பார்ப்பதற்கு எத்தனை அழகுள்ளவளாக இருந்தாளோ, அத்தனை அழகு உள்ளத்திலும் அவளுக்கு இருந்தது. குழந்தைப் பருவத்திலிருந்தே, க்ருஷ்ணப்ரேமை அவளிடம் மிக அதிகமாக இருந்தது. பகவான், யாரிடம் மிகவும் கருணை செய்கிறாரோ அவரிடமிருந்து மற்ற அனைத்தையும் அபகரித்துக்கொண்டுவிடுவார். இளம்பருவத்திலேயே அவள் தன் கணவனை இழந்தாள். பிறகு அடுத்தடுத்து அன்னை, தந்தை, மாமனார், மாமியார் யாவரையும் இழந்தாள். பிறந்தகத்திலும் புக்கத்திலும் அவளுக்கென்று ஒரு உறவும் இல்லை.

அளவுகடந்த சோகத்தாலும், க்ருஷ்ண பக்தி வேகத்தாலும் அவள் ப்ருந்தாவனத்தை அடைந்தாள். ஸ்ரீஹித ஹரிவம்சசந்திரரிடம் தீக்ஷை பெற்றுக்கொண்டு பஜனையில் ஈடுபட்டாள். ப்ருந்தாவனத்தில், பஞ்சினால் நூல் நூற்று தன் ஜீவனத்தை நடத்திக்கொண்டாள். ஸ்ரீஹிதஹரிவம்சரின் கருணையால் அவளது கடுமையான கர்மமயமான வாழ்வு, சாந்தமடைந்த ப்ரேமமயமான வாழ்வாக மலர்ந்தது. எந்நேரமும் ஸ்ரீ க்ருஷ்ண கீர்த்தனம் செய்து கொண்டு, ஸ்ரீகிருஷ்ண ஸ்மரணையிலேயே இருந்து வந்தாள். நூல் நூற்றுக்கொண்டே க்ருஷ்ண கீர்த்தனம் செய்வாள். குரு க்ருபையால் அவளுக்கு சீக்கிரத்திலேயே ப்ரேம பக்தி சித்தித்துவிட்டது.

வனத்தில் அழகிய மலர்கள் மலர்ந்து, உதிர்ந்து விடுகின்றன. அவற்றின் அழகும் வாசமும் இறைவனைத் தவிர யாருக்குத் தெரியும்?

அதுபோன்று, நமது பாரத தேசத்தில் கணக்கற்ற பக்தர்கள் பிறக்கிறார்கள். அவர்கள் ஆடம்பரமின்றி ஏகாந்த ஜீவனாக வாழ்ந்து, சாதனை புரிந்து சித்தர்களாக ஆகிறார்கள். இறைவனை அடைகிறார்கள். வெளிஉலகுக்கு தெரியாமலேயே வாழ்ந்து மறைகிறார்கள். கர்மடீபாயும் இப்படித்தான் மறைந்திருப்பாள். ஆனால், அவளது வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தால் அவள் வெளி உலகுக்கு தெரிய வந்தாள். அது என்ன சம்பவம்?

அக்பரின் ராஜ்யகாலம் அப்போது; அக்பரின் மருமகன் அஜீஜ் பேக், மதுரா ஜில்லாவின் ஹகீமாக இருந்தான். அவனது சகோதரன் ஹஸன்பேக், மதுரா அரசாட்சி சம்பந்தமாக அவனுக்கு உதவிபுரிந்து வந்தான். ஒருநாள் ஹஸன்பேக், ப்ருந்தாவனத்திற்கு மேற்பார்வை செய்ய வந்தான். யமுனைக் கரையில் அமர்ந்து நதியின் அழகை ரசித்துக்கொண்டிருந்தவன் திடீரென்று யமுனையில் ஒரு மிக அழகிய யுவதி நீராடிக்கொண்டிருந்ததைக் கண்டான். அவன் கண்கள் அவள் மீது நிலைத்துவிட்டன. அவள் நீராடிவிட்டு கரையேறிச் சென்றாலும் அவனது மனம், அவள் பின்னேயே சென்றுவிட்டது. தனது சேவகர்களை அவள் பின்னே அனுப்பி அவளைப் பற்றிய விவரங்களை அறிந்து வரச் சொன்னான்.

சேவகர்கள் திரும்பி வந்து, ''ஸர்கார்! அவளது பெயர் கர்மடீபாய். அவளுடைய வீட்டு மனிதர்கள் அனைவரும் இறந்து விட்டனர். அவள் தனியாக இருக்கிறாள். நூல் நூற்று பிழைப்பு நடத்தி வருகிறாள்'' என்று விவரங்கள் தந்தனர்.

ஹஸன் ப்ரசன்னமடைந்து, ''அப்படியென்றால் மிகவும் சௌகர்யம்! ஏதாவது ஆசைகாட்டி அவளை நம் வசப்படுத்தி விடலாமே!'' என்றான்.

உடனே அவர்கள், ''ஸர்கார்! அவள் ஏழைதான். ஆனால், பக்திமதி. இரவும் பகலும் இடைவிடாது பஜனை செய்வாளாம். அவளை எந்தவிதமான போகங்களாலும் சபலமடைய செய்ய முடியாது. அவளுடைய த்யாகம், வைராக்யம், கற்புநெறி இவற்றைப் பற்றி, அனைவரும் மிகவும் உயர்வாகப் பேசுகிறார்கள்'' என்றனர்.

இதைக்கேட்டு, ஹஸன் வருத்தமடைந்தான். சிறிது யோசித்து விட்டு 'அவள் எங்கே வசிக்கிறாள்?' எனக் கேட்டான்.

யமுனைக்கரைக்கு அருகில், ஒரு குடிசையில் அவள் தனியாக வாழ்ந்து வருகிறாள் என அறிந்துகொண்டு அவன் ஒரு திட்டம் தீட்டினான். தன் திட்டத்தை நிறைவேற்ற இரண்டு வேசிகளை ஏற்படுத்திக்கொண்டான்.

அடுத்த நாள் அந்த இரண்டு வேசிகளும் பக்தையைப் போல் வேஷமிட்டுக்கொண்டு யமுனையில் நீராடுவதுபோல் கர்மடீபாய் நீராடும் துறைக்கு வந்தார்கள். நீராடிவிட்டு, திலகமிட்டுக்கொண்டு, கர்மடீபாய் தன் குடிசைக்கு கிளம்பும்போது அவர்கள் அவளிடம் சென்றனர். தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். ''அம்மா, நாங்களிருவரும் பால விதவைகள். ப்ருந்தாவனத்தில் பஜனை செய்துகொண்டு வாழ்ந்து வருகிறோம். நாங்கள் உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டு இருக்கிறோம்! நீங்கள்தான் கர்மடீபாய் என நினைக்கிறோம்! உங்களிடமிருந்து ஸத்சங்கம் பெற விரும்புகிறோம்'' என்றனர்.

கர்மடீபாய், ''நான் ஸத்சங்கத்திற்கோ, புகழ்ச்சிக்கோ ஏற்றவள் இல்லை. ஆனாலும், என்னால் உங்களுக்கு ஏதாவது ஸேவை செய்ய முடியும் என்றால் அதற்காக நான் தயாராக உள்ளேன்'' என்றாள்.

பேசிக்கொண்டே இருவரும் கர்மடீபாயின் குடிசையை அடைந்தனர். அவர்களை கர்மடீபாய் மரியாதையுடன் அமரச்செய்து தர்மவிஷயமாக பேசலானாள். இப்படியே தினமும் இருவரும் யமுனை ஸ்னானம் செய்துவிட்டு கர்மடீபாயின் குடிசைக்குச் சென்று சத்சங்கம் செய்வதுபோல் நடித்தனர். அவளுடன் நட்பு செய்து கொண்டனர். ஒருநாள் இருவரும் குடிசைக்கு நேரங்கழித்து வந்தனர். கர்மடீபாயும் கபடமின்றி, ''இன்று ஏன் உங்களுக்கு இங்கு வர நேரமாகிவிட்டது'' என்று வினவினாள்.

அவர்கள், ''எங்கள் வீட்டிற்கு இன்று ஒரு பெரிய மஹாத்மா வந்துள்ளார். அவருக்கு சேவை செய்துவிட்டு கிளம்புவதற்கு நேரமாகிவிட்டது'' என்றனர்.

கர்மடீபாய் உத்ஸாஹத்துடன், ''அப்படியென்றால் அந்த மஹாத்மாவை எனக்கும் தரிசனம் செய்து வைப்பீர்களா?'' என்று கேட்டாள்.

''ஏன் இல்லாமல்? நாளை யமுனைஸ்னானம் முடிந்ததும் நீங்களும் எங்களுடன் கிளம்பி எங்கள் வீட்டுக்கு வந்து விடுங்கள்'' என்றனர்.

அடுத்தநாள், ஒருத்தி கர்மடீபாயை அழைத்துவர யமுனைக்கரைக்கு வந்தாள். மற்றொருத்தி, ஹஸன்பேக்கிற்கு இது பற்றி செய்தி தெரிவிக்கச் சென்றாள். முதலில் வந்தவள் கர்மடீபாயை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவளிடம், ''மஹாத்மாஜி இப்போது இங்கு இல்லை. எங்கோ வெளியில் சென்றுள்ளார் என நினைக்கிறேன். நீங்கள் இங்கு இருங்கள் நான் சென்று பார்த்து அழைத்து வருகிறேன்'' என்று கூறி வெளியே சென்றுவிட்டாள்.

அதே சமயம் ஹஸன் மற்றொரு அறையிலிருந்து வெளியே வந்து கர்மடீபாய் முன்நின்றான். ''சுந்தரீ, நீ காணவந்துள்ள மஹாத்மா நான்தான்! நான் எவ்வளவு சக்தி வாய்ந்தவன் தெரியுமா? சாம்ராட் அக்பரின் மருமகன் நான். உன் மனோரதங்கள் எல்லாவற்றையும் நான் கணத்தில் நிறைவேற்றி வைக்கிறேன்! சொல்! என்ன வேண்டும் உனக்கு! உன்னை நான் விரும்புகிறேன். உனக்கு தர முடியாது என்று ஒரு பொருளும் கிடையாது. நீ வாய்மலர்ந்து, நான் உன்னுடையவள் என்று ஒருவார்த்தை கூறினால் போதும். நான் என்னுடைய அனைத்தையும் உன் மேல் சமர்ப்பித்துவிடுகிறேன். உனக்கு அழகும் இளமையும் இறைவன் தந்துள்ளான்; ஏன் வீணாக்குகிறாய்! உன்னை ஹ்ருதயத்தில் வைத்து பூஜிப்பேன்! சொல் உனக்கு என்ன வேண்டும்?'' என்று கூறினான்.

இதைக்கேட்ட கர்மடீபாய், நடுங்கிப் போய் மூலையில் ஒடுங்கிக்கொண்டாள். பதில் கூறாமல் மௌனமாக இருந்த அவளை நோக்கி ஹஸன் நெருங்கினான். அவள் அந்த க்ஷணத்தில் பகவானை தியானம் செய்தாள். அவளுக்கு எங்கிருந்து பலம் வந்ததோ? சிங்கத்தைப் போல் கர்ஜித்தாள். ''நீசனே! அதமனே! அங்கேயே நில்! நெருங்கினால் பொசுக்கிவிடுவேன்'' என்று உரக்கக் கூவினாள். ஆகாயமே அதிர்ந்தது. அவள் கர்ஜனையால், ஹஸன் கூட ஒரு நிமிடம் நடுங்கிவிட்டான். ஆனாலும் நில்லாமல், அவளை நெருங்கினான். ஆனால், அவன் கண்ணுக்கு கர்மடீபாய் தெரியவில்லை. ஒரு சிங்கம்தான் தென்பட்டது. அது அவனை நோக்கி உறுமுவதும்

தெரிந்தது. மேலும், தனது கூறிய பற்களாலும், நகங்களாலும் அவனை கிழித்தெறிந்து விடுவதுபோல் பாயத் தயாராகவும், அந்த சிங்கம் இருந்ததைக்கண்டு, அவன் நடுங்கிப்போய் வெளியே ஓடத் தயாரானான். ஆனால், வீடு வெளியே தாளிடப்பட்டிருந்ததால் அவனால் வெளியேயும் செல்ல முடியவில்லை. கதவை தட்டித் தட்டி கதறினான். பயத்தால் உறைந்துபோய் மூர்ச்சித்து விழுந்தான். எத்தனைநேரம் அப்படியே கிடந்தானோ தெரியவில்லை.

சிறிதுநேரம் கழித்து, வேசிகள் வந்து கதவைத் திறந்துகொண்டு, உள்ளே வந்தனர். மூர்ச்சையாகிகிடந்த ஹஸனைப் பார்த்தனர். அங்கு கர்மடீபாயும் இல்லை, சிங்கமும் இல்லை. ஹஸனை மிகவும் சிரமப்பட்டு மூர்ச்சை தெளிவித்தனர். நினைவு வந்ததும் ஹஸன் பயத்தால் மறுபடியும் தடதடவென நடுங்கினான். அங்கும் இங்கும் பார்த்தான். அலறிக்கொண்டு மறுபடியும் மூர்ச்சையானான். பயத்தாலோ அல்லது நிஜமாகவே சிங்கத்தைக்கண்டோ, ஒவ்வொருமுறை நினைவு வந்தாலும் மறுபடி மூர்ச்சையாகி விழுந்துகொண்டே இருந்தான். வெகுநேரம் கழித்து சாதாரண நிலையை அடைந்தான். தன் செயலை நினைத்து பச்சாதாபமடைந்தான். கர்மடீபாய், சாக்ஷாத் தேவியின் ஸ்வரூபம்தான். அவளிடம் மன்னிப்பு கேட்டால்தான் தன் பாபம் தீரும் என நினைத்தான். ஆனால் கர்மடீபாய் எப்படி அறையிலிருந்து மறைந்தாள்? அவள் இருக்கிறாளா? இல்லையா? இருந்தால் அவள் அருகில் சென்றால் மறுபடி சிங்கம் வெளிப்பட்டு, என்னை அடித்துத் தின்றுவிடுமா? என விதவிதமாக நினைத்தான். மறுபடியும், அந்த வேசிகளையே அனுப்பி விவரங்களை சேகரிக்கச் சொன்னான்.

இருவேசிகளும் பயந்துவிட்டனர். அவர்களுக்கு கர்மடீபாயிடம் மறுபடி செல்ல துணிவு வரவில்லை. ஆனாலும் ஹஸனின் ஆணையை மீற முடியவில்லை. பயந்து நடுங்கிக்கொண்டே கர்மடீபாயின் குடிசையை அடைந்தனர். அவளை நமஸ்கரித்து தூரத்திலிருந்தே நடந்தவற்றுக்கு மன்னிப்பு கேட்டனர். கர்மடீபாய், அவர்களிடம் நடந்தது எதுவும் தனக்கு நினைவு இல்லாததுபோலும், தன் மனதில் எந்தவிதமான கோபமும் இல்லாதது போலும் நடந்துகொண்டாள். இரண்டு பெண்மணிகளும், ஹஸனிடம் வந்து நடந்ததை கூறினார்கள். ஹஸனும் நிறையை பணத்துடன் கர்மடீபாயின்

குடிலுக்குச் சென்று, அவளுக்கு **த**னத்தை சமர்ப்பித்து தன்னை மன்னித்து **த**னத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொண்டான். கர்மடீபாய் தனக்கு **த**னம் தேவையில்லை என்றும், இனி எந்தப் பெண்மணியின் மீதும் தவறான பார்வையை வீசமாட்டேன் என்று உறுதிமொழி தந்தால் போதும் என்றும் கூறி, அவனை மன்னித்து அனுப்பிவிட்டாள்! நினைத்த மாத்திரத்தில் க்ருஷ்ணபகவான், தனது பக்தர்களை சங்கடத்திலிருந்து காப்பாற்றுகிறான். அவனுடைய பக்தர்களுக்கு துக்கமோ, பயமோ என்றும் ஏற்படாது.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

## அறிவிப்பு!

1995-ல் ஸ்தாபிக்கப்பட்டு, ஸாந்தீபனி குருகுலம் வேதபாடசாலை இன்றளவும், மதுரபுரி வளாகத்திலும், சென்னையில் உள்ள ஆலப்பாக்கத்திலும் நடந்து வருகின்றது. நம்முடைய பாரததேசத்தின் ஜீவனாக இருக்கக்கூடிய வேதத்தைக் காப்பாற்றுவதில் எல்லோருடைய பங்கும் இருக்கவேண்டும் என்பது ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் விருப்பம். அதன்படி, ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் வீட்டிலுள்ள ஸ்வாமி படத்தின் முன்பாக ஒரு உண்டியல் வைக்கவும். அதன்மேல் "**வேத நிதி**" என்று எழுதி தினமும் அதில் ஒரு ரூபாய் போட்டு வரவும். ஒவ்வொரு வருடமும், டிசம்பர் 31-ந் தேதி அதில் சேர்ந்த பணத்தை எடுத்து **ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் (Sri Sandeepani Gurukula trust)** என்ற பெயருக்கு DD எடுத்து Guru Krupa, No. 24-A, Mangai Street, off : Pillayar Koil Street, Jafferkhanpet, Chennai - 600083 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**- Trustees**

# கோபீ ப்ரேமை

கண்ணனிடமிருந்து தூதனாக வந்த உத்தவனிடம் நேரிடையாகப் பேசாமல், கோபிகைகள் ஒரு கரியவண்டைப் பார்த்து, உத்தவனிடம் என்னகூற வேண்டுமோ அவற்றைக் கூறுகின்றனர். ‘ஹே கரிய வண்டே! உன்னுடைய யோக சாஸ்திரத்தில் அப்படியென்ன உயர்ந்த குணம் உள்ளது, எங்கள் சுந்தரன், பரேமஸ்வரூபன்; கண்ணனைத் த்யாகம் செய்து அந்த குணத்தை ஏற்றுக்கொள்வதற்கு? உங்களைப் போன்ற யோகசாதகர்கள் கண்களால் எதையும் பார்ப்பதில்லை; காதுகளால் எதையும் கேட்பதில்லை. உங்களுடைய ப்ரஹ்மம் ஜ்யோதி ஸ்வரூபமாக இருக்கலாம். ஆனால், எங்கள் கிருஷ்ணனைப் போன்று, எங்கள் கண்களுக்கு விருந்தாகக்கூடியதா? அவனது மதுரமொழிகளும், குழலோசையும் போன்று காதுகளுக்குத்தான் இனிமை தரக்கூடியதா? அப்படிப்பட்ட ப்ரஹ்மத்திற்காக எங்கள் கருணாமயமான அழகன் கண்ணனை த்யாகம் செய்வோமா?

நாங்கள் கண்ணனின் மதுர மதுர முரளீ நாதத்தின் இனிமையால் எங்களை மறந்து நிற்போம். அப்போது கண்ணன் எங்களது கழுத்தில் தன் அழகிய புஜங்களை வைத்து அணைப்பான். நாங்கள் புஷ்பங்கள் போல் மலர்ந்துவிடுவோம். கண்ணனுடன் வனப்ரதேசத்தில் குலமரியாதை, லோகமரியாதை அனைத்தையும் துறந்து ப்ரேம விளையாட்டுகளில் ஈடுபடுவோம். இப்படிப்பட்ட அம்ருதமயமான க்ருஷ்ணப்ரேமையை விட்டுவிட்டு ரசமற்ற நிர்குண உபாசனையை ஏற்றுக்கொள்வது என்பது எங்களுக்கு விஷம் போன்று தோன்றுகிறது!

யோகமார்க்கத்திலுள்ள கஷ்டங்கள், கட்டுப்பாடு, முயற்சி இவற்றை ஆலோசனை செய்துவிட்டு, கோபிகைகள் கூறுகின்றனர். ஹே உத்தவ! நாங்கள் கோகுலத்து ஆயர் பெண்கள். எங்களுக்கு யோகசாதனை போன்ற கடினமான மார்க்கம் எப்படி சரிப்பட்டு வரும்? ஜடாமுடிதரித்து, மான்தோல், பஸ்மம் போன்ற பொருள்களை சேகரித்து, பாதுகாத்து வைத்துக்கொள்ளும் திறமை எல்லாம் எங்களுக்குக் கிடையாது. உன்னுடைய ப்ரஹ்மம் என்பதோ யாராலும் ஆழம் காணமுடியாதது, அடைய துர்லபமானது. வாக்கால் சொல்ல

முடியாதது என்று சொல்கிறார்கள். இதற்காக நாங்கள் முயற்சி செய்ய விரும்புவோமா? எங்களது அழகான க்ருஷ்ணனைக் காண எந்த ஆடம்பரமான செயலும் செய்யவேண்டாம். அவனை த்யானம் செய்வதற்கோ, எள்ளளவுகூட சிரமப்பட வேண்டாம். மேலும் த்யானம் செய்வதே பேரானந்தமாக இருக்கும். இப்படி ஒரு விலைமதிப்பற்ற ரத்னமாக கிருஷ்ணன் எங்களிடம் இருக்கும்போது, அந்த இடத்தில் துச்சமான சாம்பலை வைத்துக்கொள்வோமா?' இப்படி ஸஹஜமான சரஸமான ப்ரேமபக்தி மார்க்கத்தையும், கடினமான வறண்ட யோக சாதனைகளையும் கோபிகைகள் இனம் பிரித்து அழகாக கூறுகிறார்கள்.


**அறிவிப்பு**

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** (5 வரிகள் / 40 வார்த்தைகள்)

¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,

24-A, மங்கை தெரு, off : பிள்ளையார் கோயில் தெரு, ஜாபர்கான்பேட்டை,

சென்னை - 600 083.

Cell : 94440 03710



**நமது மிஷனிற்கு கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**

"Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji**"

Guruji Sri Muralidhara Swamigal Mission,

Guru Krupa,

No. 24-A, Mangai Street, off : Pillayar Koil Street,

Jafferkhanpet, Chennai - 600 083.

e-mail : contact@madhuramurali.org

# ஸ்ரீ ஸ்வாமியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 118

*தைரியமோடு உன் மெய்யக நாடயான்*
*கட்டழிந்தேன் அருள் அருணாசலா*

சாதனைகளைச் செய்துவரும்பொழுது, பகிர்முகமாக நடக்கும் விஷயங்களினாலும், சாதனைகளிலும் மனதானது ஸஞ்சலப்படுவது உண்டு. இப்படி பலவிதத்தில் மனது சலனப்படுவதற்கு பலவித சாதகமான சூழ்நிலைகள் உள்ளது. ஆனால், சாதனைகளை செய்து வரும்பொழுது, மனது சலனப்படும்படியாக எப்படி ஒரு விஷயம் நடந்தாலும், அதனால் கலங்காமல், தொடர்ந்து தீரனாக யாரொருவர் சாதனைகளை பயில்வாரோ, அவரே சாதனைகளின் பலனை அடைவார். உண்மையில் ஆத்மசாதனைகளின் பயில ஒருவர் பயப்பட அவசியமில்லை. தைரியமாக செய்யலாம்.

ஆத்மசாதனைகளை பழகும்பொழுது சரீரத்தில் சிரமங்கள் ஏற்படும் என்பது உண்மைதான். ஆயின், அதே சமயத்தில் ஒரு இனம் புரியாத ஆத்மானந்தமும், வலியுடன் கூடவே இருக்கும். ஒரு தாயார் பிரசவ வேதனையில் வலி தாங்காமல் துடித்தாலும், ஒரு குழந்தை பிறக்கப்போகிறது என்று சந்தோஷமும் அடைவாள் அல்லவா? அதுபோல்தான் இதுவும்.

'கட்டழிந்தேன் அருள்'-எப்பேர்ப்பட்ட பிரதிகூலத்தினாலும் (சிரமங்கள்) நான் நிலைகுலைந்து போய் சாதனைகளிலிருந்து வழுவாமல் இருக்க அருள்செய்வாய் என்று பிரார்த்திப்பது போல் அமைந்துள்ளது.

பக்தர்களின் சரித்திரங்களை படித்துப் பார்த்தால், இறைவன் பல சோதனைகளைச் செய்திருப்பது தெரியவருகிறது. உதாரணத்திற்கு, ஒன்றிரண்டு சரித்திரங்களை பார்த்தாலே இது தெளிவாக தெரியவரும். பத்ராசலம் ராமதாசர் எனும் பக்தர், பத்ராசலத்தில் ஸ்ரீராமபிரானுக்காக மிக அழகாக கோவிலை கட்டினார். அவரை ஒரு முகலாய மன்னன், சிறையிலடைந்தான். சாதாரணமாய் அல்ல. மிகவும் கொடுமையான சிறையில், கடுமையாக வாட்டி எடுத்தான். ஆனால், அவரோ இதனால் தனது ராமபக்தியில் சிறிதும் பாதிக்கப்பட்டவராக

தெரியவில்லை. மாறாக, அவரது ராமபக்தி அப்பொழுத மேலும் பிரகாசித்தது என்றே சொல்லலாம்.

கண்ணப்ப நாயனார் எனும் பக்தர், வேடர் குலத்தை சேர்ந்தவர். சிவபெருமானின் கண்களிலிருந்து உதிரம் வடிவது கண்டு பொறுக்காது, தனது கண்ணையே பெயர்த்து சிவபெருமானின் கண்ணில் வைத்தார். 'கண்ணை அப்பியதால்' கண்ணப்பர் என பெயர் பெற்றார். தன் கண்ணை இழந்ததற்கு சிறிதும் வருத்தப்படாமல், தான் பேரன்பு கொண்ட இறைவனின் கண்களில் உதிரம் வடிவது நின்றுவிட்டதைக் கண்டு பூரித்து போனார்.

சிறுதொண்டர் எனும் பக்தரின் சரித்திரத்தில், அடியார் வடிவில் வந்த இறைவனுக்காக தனது சொந்த மகனையே, அமுதாக படைத்ததாக வருகிறது. இதைவிட சோதனை ஒருவருக்கு வர இயலாது.

ஆனால், மேற்கண்ட பக்தர்களின் சரித்திரம் எதை காட்டுகிறது என்றால், மிகப்பெரிய கஷ்டமான காலங்களிலும் கூட அவர்கள் தங்களின் பக்தியிலிருந்து சிறிதும் வழுவவில்லை என்பதுதான். இறைவன் பக்தர்களை கஷ்டப்படுத்தலாமா என்றால், மேற்கண்ட பக்தர்கள், இறைவன் கொடுத்த சோதனைகளை கஷ்டமாகவே நினைக்கவில்லை.

நெஞ்சை உருக்கும் மஹாபக்தர்களின் சரித்திரம், நமக்குதான் கஷ்டமாக தெரிகிறது. அவர்களுக்கு அது அப்படி இல்லை. இறைவன் சுலபமாக கிடைப்பான் என்று நினைப்போருக்கு அவன் அப்படியே இருந்துள்ளான். இறைவன் கடினமானவன் என்று நினைப்போருக்கு அவன் துர்லபனாகவே இருந்துள்ளான்.

இறைவனை நேருக்கு நேர் பார்க்க முடியும் என்றோ, ஆத்ம சாக்ஷாத்காரத்தை அடையமுடியும் என்றோ நினைப்போரே அதை அடைவர். இது போன்ற விஷயங்கள், நமக்கு ஒத்துவராது என்று விலகுவோருக்கு, இது போன்ற உன்னதமான விஷயங்கள் பிரம்மப்ரயத்னமாகவே இருக்கும்.

ஆகையால், ஆத்மசாதனைகள் பழகுவோர், இறைவனை பார்க்கமுடியும் என்ற நம்பிக்கையை குலைக்காதவாறு இருக்கும் சங்கத்தை வைத்துக்கொள்ளவேண்டும். மேலும், இறைவனை

பார்க்கமுடியும் என்பது அசாத்தியமான விஷயம் எனில், மஹான்கள் அதை உபதேசம் செய்வரோ?

ஆத்மா என்றும் இறைவன் என்றும் சப்தம் காதில் விழவே ஒருவர் பலகோடி ஜன்மங்களில் புண்ணியம் செய்திருக்க வேண்டுமென மஹான்களும், தத்துவ நூல்களும் சொல்கின்றன. அதிலும், ஒரு மஹாத்மாவின் சங்கம் கிடைக்க, மேலும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இதில் ஐயமில்லை. உண்மையான மஹாத்மாவின் சங்கத்தை அடைந்த ஒருவர் சாதனைகளில் அதைர்யப்படுதலே கூடாது. அசாத்தியமான விஷயங்களை உண்மையான ஸாதுக்கள் உபதேசம் செய்யார்.

(தொடரும்)

# செய்திகள்

### செப்டம்பர் – 15ஆம் தேதி, 20ஆம் தேதி

ஏகாதசியை ஒட்டி, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால், மதுரபுரியில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிவரதனுக்கு திருமஞ்சனம், ஆராதனை நடைபெற்றன.

### செப்டம்பர் – 18ஆம் தேதி

புரட்டாசி முதல் சனிக்கிழமையை ஒட்டி மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில் உத்ஸவர் ஸ்ரீ பக்தகுதூஹலன், மலைப்பட்டு கிராமத்திற்கு புறப்பாடு கண்டருளினார். திரளான மக்கள் இதில் கலந்துகொண்டு நாம கீர்த்தனம் செய்தனர்.

### செப்டம்பர் – 24ஆம் தேதி

புரட்டாசி இரண்டாம் சனிக்கிழமையை ஒட்டி ஸ்ரீ பக்தகுதூஹலன் மஹாரண்யம் கிராமத்திற்குப் புறப்பாடு கண்டருளினார். புறப்பாட்டில் கிராமத்து மக்கள், குழந்தைகள் திரளாக கலந்துகொண்டு ‘‘ஹரேராம’’ நாமசங்கீர்த்தனம் செய்தது மிகவும் ஆனந்தமாக இருந்தது.

**மங்களானி பவந்து**